இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கட்கிழமை 24-11-2025

# அலுவலர்களே எதிர்க்கிறார்கள்!

தீவிர சிறப்பு வாக்காளர் திருத்தப் பணிகளை அரசியல் ரீதியாக அரசியல் கட்சிகள் மட்டும் எதிர்க்கவில்லை. அரசு அலுவலர்களே இந்தியாவின் பல மாநிலங்களில் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

**S.I.R. பணிச்சுமை காரணமாக மத்தியப்பிரதேசத்தில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு அலுவலர் தற்கொலை செய்துள்ளார். BLO அலுவலராக பணியாற்றிய உதயபானு சிகாரே என்கிற பள்ளி ஆசிரியர், பணிச்சுமை காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளார்.**

**S.I.R பணிச்சுமை காரணமாக கேரளாவில் கண்ணூர் மாவட்டம் காங்கோல் ஆலப்படம்பா பஞ்சாயத்தைச் சேர்ந்த அனீஷ் ஜார்ஜ் தற்கொலை செய்துள்ளார்.** 'என் மகன் அதிகாலை வரைக்கும் வேலை பார்த்து கஷ்டப்பட்டான். பணி அழுத்தம் காரணமாக வேலையில் இருந்து விடுவிக்கக் கோரி மூன்று முறை விண்ணப்பம் செய்தான். இறப்புக்கு முந்தைய நாள் நள்ளிரவு 1.30 மணி வரைக்கும் வேலை பார்த்தான்' என்று ஜார்ஜின் தந்தை சொல்லி இருக்கிறார். இதனைத் தொடர்ந்து கேரள மாநில அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்தினார்கள். உள்ளாட்சித் தேர்தல் வரைக்கும் இந்தப் பணிகளை நிறுத்தி வைக்க அவர்கள் கோரிக்கை வைத்தார்கள்.

ராஜஸ்தானில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு அலுவலர்கள் 2 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். **ராஜஸ்தானில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு அலுவலராக நியமிக்கப்பட்ட அரசு பள்ளி ஆசிரியர் முகேஷ் ஜாங்கிட் என்பவர் ரயில் முன்பு குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.** தன்னை விட மூத்த அதிகாரி, தன்னை மிரட்டியதாக முகேஷ் சொல்லி இருந்தாராம்.

**மேற்கு வங்கத்தில் எஸ்.ஐ.ஆர். பணியால் ஏற்பட்ட பணிச்சுமையின் காரணமாக பி.எல்.ஓ. அதிகாரி தற்கொலை செய்து கொண்டதாக தகவல் வெளியாகி உள்ளது.** தனது தற்கொலைக்கு தேர்தல் ஆணையமே காரணம் எனக்கூறி கடிதம் எழுதி வைத்துவிட்டு ரிங்கு தரத்தார் என்பவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தின் கிருஷ்ணா நகரில் பள்ளி ஆசிரியராக பணியாற்றி வந்தார் அவர்.

தினமும் 100 வீடுகளுக்கு சென்று விண்ணப்பங்களை வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அழுத்தம் கொடுப்பதாக ராஜஸ்தான் மாநில அரசு பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு புகார் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தானில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு அலுவலர் தற்கொலையை தொடர்ந்து ஆசிரியர் சங்கத்தினர் போராட்டம் நடத்தினர்.

அதீதமான பணி நெருக்கடிகளைக் களைந்திட வலியுறுத்தி வருவாய்த் துறை சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில், **"தமிழகத்தில் தற்போது நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த பணிகளில் (S.I.R.) உரிய திட்டமிடுதலை தேர்தல் ஆணையம் செய்யவில்லை"** என்று சொல்லி இருக்கிறார்கள்.

★ வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிக்கு உரிய கால அவகாசம் வழங்கிட வேண்டும். அனைத்து வாக்குச் சாவடி நிலை அலுவலர் (BLO), கண்காணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து நிலை அலுவலர்களுக்கும் உரிய பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

★ வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளை முழுமையாக பிழைகள் இன்றி மேற்கொள்ள கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்திட வேண்டும். வாக்குச்சாவடி நிலை அலுவலர் (BLO), கண்காணிப்பாளர் நிலைகளில் போதிய தன் ஆர்வலர்கள்/ அரசு பணியாளர்களை உடன் நியமனம் செய்திட வேண்டும் - என்று இவர்கள் கோரிக்கை வைத்தார்கள். இதன் மூலம் தெரிவது என்ன?

**அவசர கதியில் ஏதோ ஒன்றைச் செய்ய நினைக்கிறது தேர்தல் ஆணையம். அனைத்தையும் ஒரே மாதத்தில் முடிக்க உத்தரவிட்டுள்ளது தேர்தல் ஆணையம். வீடுவீடாகச் சென்று படிவங்களை வழங்குவது, அவற்றை பூர்த்தி செய்து வாங்குவது, வாங்கிய படிவங்களை இணையத்தில் பதிவு செய்வது என்ற பணிகளுக்காக ஒரு மாத கால அவகாசமே தேர்தல் ஆணையம் வழங்கி உள்ளது. இந்த கால அவகாசத்தைத்தான் அவசர கதி என்று சொல்கிறோம். இது வெளி மாநிலங்களில் அலுவலர்கள் சிலரை தற்கொலை வரைக்கும் தள்ளி இருக்கிறது.**

அகில இந்திய அளவில் ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய அவசியம் என்ன? நீண்டகால அவகாசம் எடுத்து நடத்தப்பட வேண்டிய SIR எனும் பணியை அவசர அவசரமாக நடத்த வேண்டிய தேவை என்ன? தேர்தல் ஆணையம் பகுதி பகுதியாகச் செய்ய வேண்டிய பணியை ஒட்டுமொத்தமாக அரசு ஊழியர்கள் அனைவரையும் குத்தகைக்கு எடுத்து செய்ய வேண்டியது ஏன்? அனைத்துக்கும் பின்னாலும் ஒரு சதி இருக்கிறது. அதுதான் பா.ஜ.க.வின் அரசியல் திட்டங்களுக்கு வழிவகை செய்வது ஆகும்.

**குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை, சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தல் பட்டியல் தயாரிப்பு என்ற பெயரில் நடத்த நினைக்கிறார்கள். ஊடுருவல்காரர்களை நீக்குவதாக மற்ற மாநிலத்தில் பேசுபவர்கள், இங்கு சிலரை புகுத்த நினைக்கிறார்கள். பெரும்பான்மை மக்களை வாக்குரிமை அற்றவர்களாக ஆக்க நினைக்கிறார்கள். இந்த சதியை அரசியல் அமைப்புகள் மட்டுமல்ல, அலுவலர்கள் அனைவரும் உணர்ந்து எதிர்க்கிறார்கள். மக்கள் அனைவரது எதிர்ப்புக்கும் உள்ளாகி இருக்கிறது தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள்.**

**தங்களுக்குள்ள அதிகாரத்தை அவர்கள் தவறாகப் பயன்படுத்தலாம். ஆனால் மக்கள் சரியான பாடத்தையே கொடுப்பார்கள்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.11.2025) சென்னையில் நடைபெற்ற சுரேஷ் – எழிலரசி (எ) சுகி தம்பதியரின் மகள் ஓவியா மற்றும் ஹேமசந்தர் – மோகனா அவர்களின் மகன் மனோஜ் ஹேமசந்தர் ஆகியோரது நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி வாழ்த்தினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருமதி. கிருத்திகா உதயநிதி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உள்ளனர்.

### கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் டிச.7 மதுரை வருகை!

# மதுரை வடக்கு - மாநகர் - தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் பி.மூர்த்தி – கோ.தளபதி – மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, நவ.24-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற டிசம்பர் 7ஆம் தேதி மதுரையில் நடைபெறும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்க உள்ளது தொடர்பாக மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நவம்பர் 28ந்தேதி உத்தங்குடியில் நடைபெற உள்ளது. இதில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பங்கேற்க உள்ளதாக மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி, கோ.தளபதி எம்.எல்.ஏ., மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளனர். அதன் விபரம் வருமாறு:-







கழகத் தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற டிசம்பர் 7ஆம் தேதி மதுரையில் நடைபெறும் மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தர உள்ளார்.

வரலாற்று சிறப்புமிக்க இவ்விழாவை சிறப்பாக நடத்துவது தொடர்பாக மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்டக் கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 28.11.2025 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மதுரை உத்தங்குடியில் அமைந்துள்ள ஜே.எஃப்.ஏ. லக்கி பேலஸ் திருமண மண்டபத்தில் வடக்கு மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற உள்ளது

இக்கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

எனவே சிறப்புமிக்க இக்கூட்டத்தில் மதுரை வடக்கு, மதுரை மாநகர் மற்றும் மதுரை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எர்.ஏ.,, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### 29 சட்டங்களை 4 தொகுப்புகளாக மாற்றி நடைமுறைப்படுத்த உத்தரவு!

# தொழிலாளர்களின் பாதுகாப்பை கேள்விகுறியாக்கியுள்ள மோடி அரசுக்கு கண்டனம்!

## விவசாயிகள்- தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன். குமார் அறிக்கை!

சென்னை, நவ. 24-

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அடிமை இந்தியாவின் ஆங்கிலேயன் ஆட்சிக் காலத்தில் இருந்து தொழிலாளர் வர்க்கம் தொடர்ந்து போராடிப் பெற்ற 29 சட்டங்களை, மோடி அரசு நான்கு தொகுப்புகளாக மாற்றி, சட்டமாக்கியது. இதனைத் தொழிலாளர்களின் கடும் எதிர்ப்பு காரணமாக நடைமுறைப்படுத்தாமல் வைத்திருந்த மோடி அரசு, தற்போது பணம் மற்றும் வாக்கு திருட்டு மூலம் பீகாரில் பெற்ற வெற்றி கொடுத்த தைரியத்தால் அந்த சட்டங்களை ஒன்றிய அரசு நேற்று (நவம்பர் 21) நடைமுறைப்படுத்த உத்தரவிட்டுள்ளது. இது ஆண்டாண்டு காலமாக தொழிலாளர்கள் அனுபவித்து வந்த உரிமைகளை பறிக்கவும், முதலாளிகளுக்கு ஆதரவான நிலையை உறுதிப்படுத்தவும் வழிவகை செய்யும் என்பதால் இதனை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வன்மையாக கண்டிக்கிறது. நடைமுறைப் படுத்துவதை உடனடியாக திரும்ப பெற வேண்டுமென வேண்டுகிறது.

29 சட்டங்களை, ஊதிய தொகுப்பு சட்டம் 2019, தொழிலாளர் உறவு தொகுப்பு சட்டம் 2020, தொழிலக பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிநிலை குறித்த தொகுப்பு சட்டம் 2020 மற்றும் சமூக பாதுகாப்பு தொகுப்பு சட்டம் 2020 என நான்கு தொகுப்புகளாக ஒன்றிய மோடி அரசு மாற்றி அமைத்து சட்டமாக்கியது.

இதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, ஒப்பந்த மற்றும் தினக்கூலி தொழிலாளர்களின் எண்ணிக்கை உயரும், விரும்பிய நேரத்தில் தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்படுவர், அவர்கள் 8 மணி நேரத்திற்கு மாறாக 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டிய நிலை வரும், 100 தொழிலாளர்களுக்கு மேல் உள்ள நிறுவனங்களுக்கு தொழிலாளர் சட்டங்கள் பொருந்தும் என்பது மாற்றப்பட்டு, தற்போது 300 தொழிலாளர்களுக்கு மேல் உள்ள நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும் என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது, உரிமைகளை நிலைநாட்ட நிறுவனங்களில் தொழிற்சங்கங்கள் தொடங்குவது சிரமப் பணிகள் ஆக்கப்பட்டுள்ளன, பெண்களுக்கு இரவு நேர பணி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.



இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டில் கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்பு சாரத் தொழிலாளர்களுக்கு அமைக்கப்பட்டு சிறப்பாக செய்லபட்டு வரும் நல வாரியங்களின் எதிர்காலம் கேள்வி குறியாக்கப்படும் வாய்ப்புள்ளது. குறிப்பாக சுமார் 7000 கோடி வைப்பு நிதியுடன் இந்தியாவிலேயே சிறப்பாக செயல்படும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் கலைக்கப்பட்டு இந்தியா முழுவதும் ஒரே வாரியமாக்கப்படும் அபாயம் உள்ளது.

இப்படிப்பட்டத் தொழிலாளர்கள் விரோத அம்சங்கள் அடங்கியுள்ள இந்த சட்டங்கள் நடைமுறைக்கு வரும்பொழுது தொழிலாளர்கள் பாதுகாப்பு அற்றவர்களாக ஆக்கப்படுவர். சமூக பாதுகாப்பு கேள்விக் குறியாக்கப்படும். இது முழுக்க முழுக்க தொழிலாளர்களுக்கு விரோதமான, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவான சட்டத் தொகுப்புகளாகும் என்பதால் இதனை நடைமுறைப்படுத்துவதை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வேண்டுகிறது.

எல்லாவற்றிலும், குறிப்பாக மோடி அரசின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத செயல்களை தடுத்து நிறுத்துவதில் முதல் குரல் கொடுத்து அதற்காக போராடும், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இதிலும் உறுதியாக ஒன்றிய மோடி அரசை எதிர்த்து குரல் கொடுத்து போராடி தொழிலாளர்களின் உரிமைகளை மீட்க வேண்டும் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முரசொலி மாறன் 22 வது ஆண்டு நினைவஞ்சலி!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் மலர் தூவி மரியாதை!

குமரி, நவ. 24-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக திகழ்ந்தவர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 22 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஒழுகினசேரி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டு இருந்து அவரது திருவுருவப் படத்திற்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

உடன் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக தனிக்கை குழு உறுப்பினர், உணவு வாரிய ஆணைய தலைவர் சுரேஷ்ராஜன், மாவட்ட அவைத்தலைவர் எப்.எம். இராஜரெத்தினம், மாநில சிறுபான்மையர் நல உரிமை பிரிவு துணைத் தலைவர் ஜோசப்ராஜ், நாகர்கோவில் மாநகர செயலாளர் ஆனந்த், ஒன்றிய செயலாளர் பாபு, பகுதி செயலாளர் சேக்மீரான் உட்பட மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.



நேற்று (23.11.2025) தமிழ்நாடு அரசின் சார்பில், உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் 105வது பிறந்த நாளையொட்டி, சென்னை அசோக் நகரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ், (செய்தி) உயர் அலுவலர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.